மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தொடர்ந்து, நம்முடைய நண்பர் திரு. விநாயகத்திற்குத் தப்புத் தகவலையே கொடுத்துக்கொண் டிருக்கிறார்கள். (சிரிப்பு). அதுமட்டுமல்ல. இது திருமணத்தைப் பற்றிய விவகாரம். விநாயகத்திற்குத் திருமணம் ஆனதாகக் கதையிலே அப்படி இல்லை.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

அரசினர் தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 139 (1) இன்படி, மாண்புமிகு சட்டத் துறைஅமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களை இக் கூட்டு ஆய்வுக் குழுவின் உறுப்பினராக நான் நியமிக்கிறேன்.

6. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(அ) கோவை பஞ்சாலைகளில் கதவடைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு பூபதி. அவர்கள், தம்முடைய கவன ஈர்ப்பு அறிவிக்கையையொட்டி ஒரு விளக்க வினா கேட்க விரும்பி னார்கள். ஆனால் அவர்களை அழைத்தபோது இருப்பிடத்தில் இல்லை இன்று கடைசி நாளாகையால் அவர்கள் வருத்தத்துடன் இக்கூட்டத்தை முடித்துக் கொண்டு போக வேண்டாம் என்று கருதி அவர்கள் அந்த விளக்க வினாவை இப்பொழுது கேட்க அனுமதிக்கிறேன்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சற்று நீளமாக இருப்பதைத் தாங்கள் அனுமதிப்பீர்கள் என்று நினைக்கிறேன். கோவையில் காளேஸ்வரா, சோமசுந்தரா, ரங்க விலாஸ், கம்போடியா போன்ற மில்களில் வேலை இல்லாத நிலையில் பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பல நாட்களாகப் பட்டினி கிடந்து, பட்டினியிலிருந்து தங்கள் மனைவி மக்களைப் பாதுகாக்க வேறு வழியின்றி, வயோதிகக் காலத்திற்கென்று சேமித்து வைத்திருந்த பிராவிடண்ட் நிதியிலிருந்து, பிராவிடென்ட் நிதிச் சட்டத்தின் 68 (எச்)இன்படி, கடன் வாங்கி, அரைகுறை வாழ்வு வாழ்ந்து வந்த தொழிலாளர்கள் தாங்கள் வேலை செய்து வந்த மில்கள் மீண்டும் திறந்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வரையில், தொழிலாளர்களைப் பட்டினிச் சாவிலிருந்து பாது காக்க பிராவிடென்ட் பண்டுக்கு பஞ்சாலை முதலாளிகள் தங்கள் பங்காகக் கொடுத்து வந்த அந்த நிதியை, பிராவிடென்ட் நிதிச் சட்டத்தின் 78-வது பிரிவுப்படி தொழிலாளர்களுக்கு கொடுத்து உதவ மத்திய சர்க்காரின் தொழிலாளர் அமைச்சு, சென்னையிலுள்ள ரீஜினல் பிராவிடென்ட் நிதிக் கமிஷனர் அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கத் தக்க நடவடிக்கைகளை இந்த அமைச்சு எடுக்குமா ? என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோவை ஆலைகளைப் பொறுத்த வரையில், ஆலை முதலாளிகளையும் அந்த ஆலைகளுக்குக் கடன் கொடுத்து உதவக் கூடிய பாங்கர்களையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. உயர்திரு லோகநாதன் குழு அளித்த அறிக்கையில், எந்த வகையிலே உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த உத்தரவாதத்தை அமல் படுத்தும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. கனம் உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளபடி, இந்திய அரசாங்கத்திற்குத் தெரி வித்து, அவர்கள் கோரியபடி தெரிவிப்பதற்கான கடிதங்களும் இதற்கு முன்னால் வரையப்பட்டிருக்கிறது. மீண்டும் அதுபற்றி விரைவாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்திய சர்க்காருக்குத் தூண்டப்பட்டிருக்கிறது. மேலும் அதுபற்றி விரைவுபடுத்தும் முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று நான் கூறிக்கொள்ளுகிறேன்.